Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 21 (06-12-1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை 292

## நிதானமற்ற விலைகளில் அத்தியாவசிய மருந்துகள்

யாழ். ஆங்கில மருந்து பார்மஸிகளுக்கிடையில் மருந்து விலையில் பாரிய வித்தியாசம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பனோகிளக்ஸ் என்ற வியாபாரப் பெயரையுடைய 100 மில்லி கிறாம் அளவு குளக்கோசின் சோடியம் B P. என்ற குழந்தைகளுக்கான மருந்துப் புட்டி ஒன்று 90 முதல் 100 ரூபா விலையில் விற்பனையாகிறது. ஆனால் பார்மஸி ஒன்றில் இம்மருந்து 190 ரூபாவுக்கு விற்கப் படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. மாலை 6 மணிக்குப் பிறகு திறந்து வைத்திருக்கும் பார்மஸி ஒன்று அவசர தேவைக்கு மருந்து வாங்க வருபவர்களுக்கு மேற்படி மருந்தையும், வேறு உயிர்காக்கும் (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. நா. ஸ்தாபன உயர் அதிகாரிகள் செவ்வாய் யாழ். வருகின்றனர்

## ஐரோப்பிய தமிழ் அகதிகள் பற்றி புலிகளுடன் உயர்மட்ட பேச்சு

[யாழ்ப்பாணம்]

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உயர்ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த இரு உயர் அதிகாரிகள் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளனர். இவர்கள் ஐரோப்பிய நாடுகளில் உள்ள தமிழ் அகதிகள் குறித்து விடுதலைப் புலிகளுடன் உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் நடத்துவார்கள் எனத் தெரியவருகின்றது.

திரு. சாக், டாக்டர் நிக்கலஸ் பீட்டர் ஆகிய இருவருமே யாழ்ப்பாணம் வரும் ஐ நா அதிகாரிகளாவர். இவர்கள் தற்பொழுது ஐரோப்பாவில் தங்கியுள்ள தமிழ் அகதிகள் குறித்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்துவார்கள் என அறிய வருகின்றது.

இதேவேளை அண்மையில் ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் வெளிநாட்டில் இருந்து அகதிகள் தங்கள் நாடுகளுக்குள் பிரவேசிப்பதைத் தடுப்பதற்குத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவது தெரிந்ததே.

இதில், சில ஐரோப்பியநாடுகள் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதிலும் தீவிர கவனம் செலுத்துவதாகத் தெரியவருகின்றது. [4 ஆம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு



லெப். சர்மா

02- 12- 1992 அன்று மன்னார்- வன்னி எல்லையில் சிறிலங்கா இராணுவ முகாம்கள்

## தற்காலிக யுத்தநிறுத்தம் தேவை

# படையினரைபலப்படுத்தியபின் யுத்தத்தை தொடரவேண்டும்

### எக்சத் சிங்கராஜ கட்சி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இடம் பெற்றுவரும் யுத்தத்தை இடை நிறுத்தி படையினரை போதியளவுபலப்படுத்தியபின் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்குமாறு ''எக்சத் சிங்கராஜ

அரசாங்கம் பொதுமக்களின் கோடிக்கணக்கான பணத்தை வீண்விரயம் செய்துவருகிறது. இதனால் எந்த நன்மையும் கிடைக்கவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவரும் யுத்தத்தினால்

கணக்கான பணத்தை விரயம் செய்வதில் பலன் எதுவும் இல்லை.

எனவேதற்போதைய நிலையில் தற்காலிகமாக யுத்தத்தை நிறுத்தி படையினரின்

## தபாலகம் திறந்திருக்கும்

(வடமராட்சி)

க. பொ. த. சாதாரண பரீட்சை அடுத்த வாரம் ஆரம்பமாவதையிட்டு கரவெட்டி தபாலகம் இன்று காலை 8.00 மணி முதல் 12 00 மணிவரை தபால் அறிமுக அட்டை விநியோகத்திற்காக திறந்திருக்குமென தபாலதிபர் திரு. எஸ். சிவராசசிங்கம் தெரிவித்தார். [யோ]

## படகு கைப்பற்றப்பட்டது

[கொழும்பு]

ஆயுதங்கள், மற்றும் ஆபரணங்கள், முகமூடிகள். கமராக்கள் ஆகியனவும் சீருடைத் துணிகளும் கொண்டு செல்லப்பட்ட படகு ஒன்று முந்தல் பொலிசாரால் கைது செய்யப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து அவர்களது ஆதரவாளர்கள் எனப்படும் சிலரும் வீடுகளில்வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், மேலும் கூறப்படுகின்றது.

## வடமத்திய மாகாணத்தில் புலிகள் தாக்கலாமாம்

கொழும்பில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினர் கவனத்தை திசை திருப்பும் நோக்கத்துடன் வடமத்திய மாகாணத்தின் மையப் பகுதியில் புலிகள் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடலாம் என்று புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளனர்.

அவ் வட்டாரங்கள் மேலும் கூறுகையில்; அண்மையில் வண்ணாங்குளம் (கட்டுபொத்த) அந்தமான்குடா, வீரவில பகுதிகளில் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் இதனைச் சுட்டிக் காட்டுவதாகவும் தெரிவித்தனர்.

கொழும்புக்குள் ஊடுருவி இருக்கும் வெடிகுண்டுப் பிரிவினரை பாதுகாக்கும் ஒரு முயற்சியாக சிங்கள கிராமங்கள் மீது கடும் தாக்குதல் நடத்துவதற்கென ஐநூறு புலிகள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இத் தகவலையடுத்து வட பிராந்திய இராணுவத்தளபதியும், கிழக்குப் பிராந்திய இராணுவத்தளபதியும் உஷார் படுத்தப்பட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது

## அவிசாவளை தோட்டங்களில் புலிகளை தேடுகிறார்கள்

(கொழும்பு)

அவிசாவளையில் புலிகள் ஊடுருவிய தாகக்கூறி அப்பகுதி தோட்டங்களில் இரவு நேரத்தேடுதல் வேட்டையில் பொலிசார் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பகுதியில் உள்ள தோட்டங்களில் கடந்த ஒரு வாரமாக இவ்வாறு இரவுநேரத் தேடுதலைப் பொலிசார் தீவிரப்படுத்தியிருப்பதால் தோட்டத் தொழிலாளர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

## கூடுதல் படையினரை சேர்க்க கூட்டுப்படை கோரவில்லை

### 'திவயின' செய்திக்கு மறுப்பு

சிறிலங்கா இராணுவத்தில் மேலும் பதினையாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று நேற்றைய திவயின பத்திரிகை வெளியிட்ட செய்தி முற்றிலும் தவறானது என்று கூட்டுப்படைகள் தலைமையகம் கூறியுள்ளது

இந்தச் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என்றும், மேலும் 15000 பேரை சேர்த்துக் கொள்ளும்படி பாதுகாப்பு அமைச்சை கூட்டுப் படைத்தலைமையகம் கேட்டுக் கொள்ளவில்லை என்றும் அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# புலிகளுக்கு எதிராக கூட்டுநடவடிக்கை பிரேமா - ராவ் ஆராய்வர்?

(பிலிப்பைன்ஸ்)

பங்களாதேஷின் தலை

பிரதமருடனும் நரசிம்மராவ் ஆராய்வார் என அச்செய்தி

தலைநகர் டாக்காவில் 'சார்க்' நாடுகளின் தலைவர்

அதிகாரிகளாவர். இவர்கள் தற்பொழுது ஐரோப்பாவில் தங்கியுள்ள தமிழ் அகதிகள் குறித்து விடுதலைப் புலிகளின்

இதேவேளை அண்மையில் ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் வெளிநாட்டில் இருந்து அகதிகள் தங்கள் நாடு

வது தெரிந்ததே.

இதில், சில ஐரோப்பியநாடுகள் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதி

தற்காலிக யுத்தநிறுத்தம் தேவை

# படையினரைபலப்படுத்தியபின் யுத்தத்தை தொடரவேண்டும்

## எக்சத் சிங்கராஜ கட்சி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இடம் பெற்றுவரும் யுத்தத்தை இடை நிறுத்தி படையினரை போதியளவுபலப்படுத்தியபின் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்குமாறு ''எக்சத் சிங்கராஜ கட்சி'' என்னும் அமைப்பின் தலைவர் டி. சிரிசிங்க என்பவர் சிறிலங்கா அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

இன்று யுத்தத்தை தொடர்ந்து நடத்தமுடியாத நிலையில் படையினர் உள்ளனர். பல இடங்களில் பின்வாங்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் பொதுமக்களின் கோடிக்கணக்கான பணத்தை வீண்விரயம் செய்துவருகிறது. இதனால் எந்த நன்மையும் கிடைக்கவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவரும் யுத்தத்தினால் எந்த முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை இக்காலப் பகுதியில் பெருமளவு படையினரை இழந்துள்ளோம்.

எல்லைப்புறங்களில் சிறிலங்கா மக்கள் வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் கோடிக்கணக்கான பணத்தை விரையம் செய்வதில் பலன் எதுவும் இல்லை.

எனவேதற்போதைய நிலையில் தற்காலிகமாக யுத்தத்தை நிறுத்தி படையினரின் பலத்தை அதிகரித்த பின்னர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக வடக்கு - கிழக்கு பகுதியில் முழுஅளவில் படையெடுப்பை நடத்தவேண்டும். இந்த நடவடிக்கையை மிக இரகசியமாக மேற்கொள்ளவேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார்.

# இஸ்மயில் கமிசன் அறிக்கை முழுமையாக தரக் கோரிக்கை

## லலி கொப்பேகடுவ விருத்தார்

(கொழும்பு)

லெப். ஜெனரல் கொப்பேகடுவவின் கொலை குறித்து முதலில் விசாரணை நடத்திய முன்னாள் நீதியரசர் இஸ்மயிலின் இறுதி அறிக்கையை முழுமையாகவாசிக்கத் தன்னை அனுமதிக்கும்படி கொப்பேகடுவவின் மனைவி லலி கொப்பேகடுவ அரசைக் கேட்டுள்ளார்.

கொப்பேகடுவவின் கொலைதொடர்பான விசாரணை குறித்து சர்வதேச ரீதியிலான விசாரணைக் குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இணக்கம் தெரிவித்ததை அடுத்தே திருமதி லலி கொப்பேகடுவ இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையில் இஸ்மயில் கமிசனின் முழு அறிக்கையும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சினால் தகவல் தொடர்பு சாதனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## அரசுமீது மக்கள் நம்பிக்கை இழந்ததால் விசாரணைக்குழு அமைப்பு

(கொழும்பு)

இந்த அரசில் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் ஆகவே அரசின்மீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்குடனே அரசு கொப்பேகடுவ மரணத்திற்கு சர்வதேச விசாரணைக்கு ஒத்துக்கொண்டது என கொழும்பு மாவட்ட சுதந்திரக்கட்சி உறுப்பினர் நிமல் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

கொப்பேகடுவவின் மரணம் இடம் பெற்றபோது சர்வதேச விசாரணை நடத்துமாறு வேண்டுகோள் விடுத்தோம், ஆனால் அரசு தனி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# வடபகுதி அடகுநகைகளைமீட்க கொழும்பில் பிரிவு திறப்பு

(கொழும்பு)

வடபிராந்திய மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு இன்னமும் மீட்கப்படாமல் உள்ள நகைகளை மீட்க விரும்புவோரின் வசதிக்காக கொழும்பில் நகை மீட்பு அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது.

மருதானை டீன்ஸ் வீதி, 220 ஆம் இலக்கத்தில் உள்ள கல்பனா கட்டடத்தில் இந்தப் பிரிவு செயற்பட்டு வருகிறது.

மன்னார், முருங்கன், வவுனியா உட்பட யாழ்ப்பாணத்தின் அனைத்துக் கிளைகளிலும் அடகு வைக்கப்பட்ட நகைகளை இவ் அலுவலகத்தில் இருந்து மீட்டுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## வீரச்சாவு



லெப். சர்மா

02- 12- 1992 அன்று மன்னார்- வன்னி எல்லையில் சிறிலங்கா இராணுவ முகாம்கள் தகர்ப்பிலபோதுலெப்டினன்ட் சர்மா (முத்தையா வீரதுரசாமி, வினாயகபுரம் முழங்காவில்) எனும்விடுதலைப்புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



லெப் அழகுராசா (தீபன்ராஜ்)



வீரவேங்கை குமார்

வவுனியா பாவற்குளம் முதலாம் யுனிட்டில் நேற்றுக்காலை 7.50 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

ஆயுதங்கள், மற்றும் ஆபரணங்கள், முகமூடிகள். கமராக்கள் ஆகியனவும் சீருடைத் துணிகளும் கொண்டு செல்லப்பட்ட படகு ஒன்று முந்தல் பொலிசாரால் கைது செய்யப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து அவர்களது ஆதரவாளர்கள் எனப்படும் சிலரும் வீடுகளில்வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், மேலும் கூறப்படுகின்றது.

## கூட்டுப்படை கோரவில்லை

### 'திவயின' செய்திக்கு மறுப்பு

சிறிலங்கா இராணுவத்தில் மேலும் பதினையாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று நேற்றைய திவயின பத்திரிகை வெளியிட்ட செய்தி முற்றிலும் தவறானது என்று கூட்டுப்படைகள் தலைமையகம் கூறியுள்ளது

இந்தச் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என்றும், மேலும் 15000 பேரை சேர்த்துக் கொள்ளும்படி பாதுகாப்பு அமைச்சை கூட்டுப் படைத்தலைமையகம் கேட்டுக் கொள்ளவில்லை என்றும் அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# புலிகளுக்கு எதிராக கூட்டுநடவடிக்கை பிரேமா - ராவ் ஆராய்வர்?

(பிலிப்பைன்ஸ்)

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் நடைபெற இருக்கும் 'சார்க்' மாநாட்டிற்கு செல்லும்போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுக்கக் கூடிய கூட்டு நடவடிக்கை பற்றி, இந்தியப்பிரதமர் பி. வி. நரசிம்மராவும் சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவும் ஆராயக் கூடும் என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன-

இதேவேளை காஷ்மீர் தொடர்பாக பாகிஸ்தான் பிரதமருடனும், இந்தியாவிலிருந்து பங்களாதேஷ் முஸ்லிம்களை வெளியேற்றுவது தொடர்பாக பங்களாதேஷ் பிரதமருடனும் நரசிம்மராவ் ஆராய்வார் என அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மாதம் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் 'சார்க்' நாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாடு நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தெரிவுக்குழு ஆராயும்

[கொழும்பு]

ஏழு தமிழ் அரசியல் குழுக்களும, இ.தொ.காவும் இணைந்து முன்வைத்துள்ள இனப்பிரச்சினைத் தீர்வுகான யோசனைகள் பற்றி பாராளுமன்றத் தெரிவுக்குழு இவ்வாரம் பரிசீலனை செய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் அமர்வு மூன்று தினங்கள் நீடிக்கும் எனறும, ஏழு தமிழ்க் குழுக்களும் முன்வைத்த நான்கு அம்ச கோரிக்கைகள் பற்றியும், இ, தொ. கா. முன்வைத்த யோசனைகள் என்பன பற்றியும் தெரிவுக்குழு ஆராயுமென்றும் மேலும் கூறப்படுகிறது.

## தங்கியிருப்பதை அறிவிக்க சென்றவர் கைது

(கொழும்பு)

வீடுகளில் புதியவர்களைத் தங்க வைத்தால் அது குறித்து தோட்ட நிர்வாகத்துக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற அறிவிப்பை பின்பற்றிய இளைஞர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இச்சம்பவம் மத்துகம பகுதியில் நிகழ்ந்துள்ளது

## வெடிப்பொருள்கள் குறித்து விசாரிக்க குழு நியமனம்

(கொழும்பு)

ராகம அரச களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தபபட்டிருக்கும வெடி மருந்துப் பொருள்கள் அப்பகுதியில் வாழும் பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடுமா என்பதை விசாரிக்க விசாரணைக் குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது.

இத் தகவலைப் பிரதம மந்திரியும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி விஜயதுங்கா பாராளுமன்றத்தல் தெரிவித்தார் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த பிரதமர், பாதுகாப்புக் காரணங்களுக்காக அங்கு களஞ்சியப் படுத்தப்பட்டிருக்கும் வெடி மருந்துப் பொருள்களின் வகை தொகையைத் தெரிவிக்க மறுப்புத் தெரிவித்தார்.

## க.பொ.த. (சா/த) பரீட்சை அனுமதி அட்டையில் குழறுபடி

[யாழ்ப்பாணம்]

க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை அனுமதி அட்டைகள் சில தவறுகளுடன் பரீட்சார்த்திகளுக்கு கிடைத்துள்ளதாக யாழ் கல்வித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சையில் எட்டுப் பாடங்களுக்கு தோற்ற விண்ணப்பித்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் சிலருக்கு ஐந்து பாடங்களுக்கு மட்டும் தோற்ற அனுமதி கிடைத்துள்ளது.

இவ்வாறு அனுமதி அட்டை கிடைத்த பரீட்சார்த்திகள் எட்டுப் பாடங்களுக்கும் தோற்ற பரீட்சை ஆணையாளர் அனுமதி வளங்கியுள்ளதாக யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ப.ர)

## க. பொ. த. (சா/த) பரீட்சை மேற்பார்வையாளர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நடைபெற இருக்கும் க. பொ த. (சா/த) பரீட்சையின் மேற்பார்வையாளர்களுக்கான கூட்டமொன்று இன்று காலை 9.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது என யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட அனைவரையும் சமூகமளிக்கும்படியும் மேலும் இக்கூட்டத்திற்கு வருகை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி-5510)

### விற்பனைக்கு

புத்தகராக்கி, மேசைகள் லாச்சியுடன், கண்ணாடி ஹோல் சோக்கேஸ், றோனியோ இயந்திரம், வேப்பம் பலகையிலான உடுப்பு வைக்கும் அலுமாரி தொடர்பு: இல. 65 (185) பிரதான வீதி, யாழ்ப்பாணம். (3225)

### மிருதங்கம்

மிருதங்க திருத்த வேலைகள் சுத்தமான முறையில் நல்ல நாதத்துடன் குறித்த தவணையில் மலிவாக செய்து கொடுக்கப்படும். கோவிந்த பிள்ளை விஜயகுமார் 192/1 நாவலர் வீதி - யாழ்ப்பாணம். (3733)

### லட்சார்ச்சனை

சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பிள்ளையார் கோவிலில் விநாயகர் விரதமும், இலட்சார்ச்சனை விழாவும் எதிர் வரும் வியாழன் முதல் முப்பதாம் திகதி வரையும் இடம்பெறவுள்ளது தினமும் மாலை மூன்று மணி முதல் விசேட அபிடேக ஆராதனைகளும், பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெறும் எனத் தெரிய வருகிறது.

### தவறிவிட்டது

செல்வராசா ரவீந்திரன் இல 2 உப்புவெளி திருக்கோணமலை 662741213V இலக்கமுடைய அடையாள அட்டை திருநெல்வேலிக்கும் - கல்வியங்காட்டிற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (3750)

### "காலம் பெறுமதியானது"

மில்க்வைற் சலவைத்தூளின் சக்திமிக்க நுரைவளம் துரித சலவைக்கு உதவுகிறது. சீருடைக்குப் பளிச்சிடும் வெண்மை. வண்ண உடைக்கு மேலும் பிரகாசம். அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகின்றது. 25வெற்றுப் பக்கற் சேர்ப்பித்து அப்பியாசக் கொப்பி ஒன்றைப் பெறுங்கள். (சி-5534) -மில்க்வைற்

### நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவாக நாளை மாலை 4.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நினைவுப் பேருரை நடைபெற உள்ளது.

''உளப்பகுப்பு இலக்கியம்'' என்ற தலைப்பிலான நினைவுப்பேருரையை கலாநிதி சபா ஜெயராசா அவர்கள் நிகழ்த்துவார். பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கும்இந்த நிகழ்ச்சியில் தொடக்க உரையை கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் நிகழ்த்துவார்.

## சிறப்பிதழ்

**இன்று 1992 மார்கழி 6 ஆம் திகதி ஞாயிறு மிருசுவில் புனித நீக்கொலஸ் தேவாலயவருடாந்தபெருவிழா காலை 7.00 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலியும் மறை உரையும் நடைபெறும்' விழாவின் இறுதி நிகழ்ச்சியாக புனித நீக்கொலஸின் திருச்சொரூப பவனி இடம்பெற்று புனிதரின் ஆசீர் வழங்கப்படும்.**

**இத்தொடர்பில் இககட்டுரை பிரசுரமாகின்றது.**

எமது யாழ் மறைவட்டத்தில் ''நற்செய்தி''விதைக்கப்பட்டு செழிப்புற்று வளர்ச்சி அடைந்துள்ள பங்குத் தளங்களில் எமது மிருசுவில் பங்குத் தளமும் ஒன்றாகும். எமது பங்கின் அரணாக விளங்கும் புனித நீக்கொலஸ் தேவாலயம் 1871 ஆம் வருடம் நிர்மாணிக்கப்பட்டு 1971 ஆம் வருடம் மறைந்த யாழ். ஆயர் ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் ஆட்சிக்காலத்தில் அதன் நூறாண்டினைப் பூர்த்தி செய்தமையும் இந்நந்நாளில் நினைவு கூறத்தக்கதாகும்

நமது அபரிமித நன்றியறிதலுக்கு அருகராயிருக்கும் ஐரோப்பிய குருபிரசாதிகள் தமது பங்கில் ஏற்றிய 'நற்செய்தி' என்னும் ஞானதீபம் மென்மேலும் சுடர்வீசிப் பிரகாசிப்பதை நாம் கண்கூடாகக் கண்டு பெருமிதம் அடைகிறோம் அவர்களுடைய தியாகசேவையினால் இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன் நமது முன்னோர் ஞானதீட்சை அடைய நாமும் 'கத்தோலிக்கு கிறிஸ்தவர்கள்' என்னும் சிறந்த நாமத்தை பூஷணமாய் அடையப் பாக்கியம் பெற்றோம.

அணை புரண்டு பொங்கிக் கொந்தளிக்கும் திரண்ட சமுத்திரத்தின் முன் அதே சமுத்திரத்தின் ஒரு நீர்த்துளி எவ்வளவு அற்பமாய்த் தோன்றுமோ அப்படியே நாமும், உலகோரின் கண் முன் தனித்தனியே அற்பமாயினும் மெய்யான இறைவனை சரியான பிரகாரம் ஆராதிக்கின்றோம் என்னும் நம்பிக்கையானது எமக்கு மிகுந்த மனோரம்மியத்தைத் தருகின்றது.

நாம் பெற்றுக்கொண்ட விசுவாச வாழ்க்கை என்னும் அதி சிறந்த ஞான ஒளி அணைந்து விடா வண்ணம் கருணையம் கடவுள் ஆயராம் புனித நீக்கொலசை எமது பாதுகாவலனாக - எமது வழிகாட்டியாக - எமது மேய்ப்பனாக - எமது முன்மாதிரியாக எமக்குத் தந்துள்ளார். இப்பெரும் நன்மைக்காக தேவதந்தை தேவமைந்தன் தேவ ஆவி மூவரும் ஒருவரான எல்லாம் வல்ல இறைவனுக்கு இந்நாளில் நன்றிக்கீதம் பாடுகினறோம்.

ஆயனாம் புனித நீக்கொலஸ் கடந்த நாட்களில் எமது ஆன்மீக மேய்ப்பனாக விளங்கி எம்மை ஆட்சி செய்து வருவதன் காரணமாக ஏற்கனவே எம் மததியில் விதைக்கப்பட்ட நற்செய்தி வருடாவருடம் மாரி மழை எனப் பொழியப்படும் அருட்கொடைகளால் செழிப்புற்று வளர்ச்சி அடைந்து வருவதை நாம் தாழ்மையுடன் உணர்கின்றோம்.

நாட்களில் பருகாது உபவாசமிருப்பார். வாலிபனானபோது தனது பெற்றோரின் ஐஸ்வரிய சம்பத்துக்கள் அனைத்தையும் ஏழைகளுக்குப் பிச்சைத்தானம் பண்ணி வருவார், தனது மூன்று குமாரத்திகளுக்கு திருமணம் செய்து வைப்பதற்கு இயலாத நிலையில், அவர்களின் கற்பினை விலைக்கிரயமாகக் கருதிய ஓர் ஏழைத்துரைமகனுக்கு தாராள பணஉதவி செய்ததன் மூலம் அப்பெண்கள் மூவரையும் விவாக பந்தனத்துக்கு உட்படுத்தச் செய்தார். தேவநேசத்தின் வேகத்தால் கிறீஸ்துவின் திருத்தலங்களைத் தரிசிக்கும் நோக்குடன் பாலஸ்தீனத்துக்கு கப்பலில் போகும்போது திடீரென ஏற்பட்ட புயற் கொந்தளிப்பை அடக்கிஅமைதியுறச்செய்தார். மேலும் திருச்சபையில் பாரம்பரியத்துக்கு விதிவிலக்காக குருத்துவத்தில் உட்பட முன்னரே மீறாப்புட்டணத்தின் மேற்றிராணியாராக இறைவனால் நியமனம் செய்யப்பட்டார்

வருடா வருடம் நடைபெறும் 'கறோல்' எனப்படும் ஒளிவிழா நிகழ்ச்சிகளின் கருப்பொருளாக - புனித நீக்கொலாசின் தர்மச் செயல்கள் கிறிஸ்மஸ் தாத்தா உருவில் வெளிக்கொணரப்படுவதும் புனிதநீக்கொலசின் உலகளாவிய கீர்த்திக்கு ஒரு எடுத்துக்காட்டெனலாம். எமது மிருசுவில் பங்குத்தளம் உருவாக்கிய கன்னியர் மடம், சாங்கோபாங்க சபைகள், பக்திக் கூட்டங்கள், ஏழு அருட் தந்தையர்கள், பத்துக்கும் மேற்பட்ட அருட்செல்விகள் போன்றவை புனித நீக்கொலஸ் எமக்கு வாரி வழங்கியுள்ள கிறிஸ்மஸ் பப்பாவின் அதி உயர்வான பரிசுப் பொருட்களெனக் கொண்டு இத்திருநாளில் இருகரங் குவித்து எம் புனிதருக்கு நன்றி பகர்கின்றோம்.

கடந்த நாட்களில் எம்மைப் பரிபாலனஞ் செய்த யாழ். ஆயர்கள் - சிறப்பாக எமது காலத்து ஆயர்களான காலஞ்சென்ற J. A. கியோமார் ஆண்டகை, ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை, ஓய்வுபெற்ற ஆயர் பேரருட் தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆகியோர் காலத்துக்குக் காலம் எமது பங்கிற்கு வருகை தந்து எம்மை விசுவாசத்தில் உறுதிப்படுத்தியதுடன் சிறந்த குருப்பிரசாதிகளை எமக்குத் தந்து எம்மை மீட்புப் பாதையில் முன்னேறச் செய்தமையும் இப்பெருவிழாவின்போது நன்றியுடன் நினைவு கூரத்தக்கனவாகும்.

மேலும் இன்றைய நாளில் எமது புதிய ஆயராம் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கட்கும் எமது அன்புக்குரிய பங்குத் தந்தை வோறன்ஸ்சேவி

இளைப்பாறிய அதிபர்
எட்வேட்ஜோர்ஜ்


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1993, ஜனவரி, 15-ம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதவிகள்:

ரூபா 3900/- நிலையானது (ஆண்டு ஒன்றுக்கு)

★ துறைத்தலைவரினாலும் பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர்(தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம என்பதுடன் துணைவேந்தர் அவரை ரூபா 4500/- 10x200-6,500/- (மாதமொன்

## கேள்வி மீளக் கோரல்

### சுகாதாரத் திணைக்களம் யாழ்ப்பாணம்

சுகாதார வைத்திய அதிகாரிகளின் பிரிவில் நியமிக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தற்காலிக மலசல கூடங்கள் அமைப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் அரச நிறுவனங்கள் அல்லது உள்ளூராட்சி ஆணையாளரின் நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை 14-12-92ஆம் திகதி பி. ப. 4-00 மணிவரை இப்பணிமனையில் ரூபா 50ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 15-12-92ம் திகதி மு. ப 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றே திறக்கப்படும். கேள்விக்காரர் விரும்பினால் அச்சமயம் சமுகமளிக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் வைக்கப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மலசலகூடம் அமைப்பதற்கான கேள்விப் பத்திரம்'' என எழுதப்பட்டு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சேர்க்கலாம்.

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை, இல 59, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.

வைத்தியகலாநிதி பொ. இரத்தினசபாபதி பிராந்திய பணிப்பாளர், 01-12-92

(சி/5540)

❋ அந்தியேட்டிக்குத் தேவையான (12''x10''Recopy)புகைப்படங்கள்

❋ நினைவஞ்சலி, கல்வெட்டு, புத்தக அட்டை லேபல்களுக்கு வேண்டிய Line Tone, Colour Blocks

❋ Photo Polymer(பிளாஸ்ரிக் Blocks)

❋ றபர் சீல்

❋ ஓவிய வேலைகள்

❋ விளம்பர ஸ்ரிக்கேஸ்

தரமாக குறைந்த விலையில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள

**கொழும்பு ஸ்ருடியோ**

**55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்** (சி-5518)


## நினைவு கூருகின்றோம் ..

### 1992-12-06

1988-ம் ஆண்டு இதே தினத்தில் யாழ் கரவெட்டி, தச்சன்தோப்பில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப் சுருளி (முருகன் சிவராசா- காட்டுப்புலம், கரவெட்டி கிழக்கு- யாழ் )

1989 ம் ஆண்டு பளுகாமம் பகுதியில் தேசவிரோதிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்

பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெறும் எனத் தெரியவருகிறது.

பேராசிரியர் பே. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் நிகழ்த்துவார்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1993, ஜனவரி, 15-ம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதவிகள்:-

1. புவியியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்I/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / உதவி விரிவுரையாளர்(தகுதிகாண்)
   ★ மீன்பிடிப் புவியியல், புவிச்சரிதவியல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கடபடும.
2. தமிழில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
   ★ இலக்கிய, மொழி ஒப்பீட்டு ஆய்வில் [ஆய்வு] முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும.
3. ஆற்றுகைக் கலையில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) வாய்பாட்டு (கர்நாடக சங்கிதம்) / பண்ணிசை (கர்நாடக சங்கீதம்) /வாத்தியங்கள்-வீணா (கர்நாடக சங்கீதம்)/ வாத்தியங்கள்-மிருதங்கம் (கர்நாடக சங்கீதம்) / பரதநாட்டியம் (நடனம்).

சம்பள அளவுத் திட்டம்

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I
ரூபா 9600-8 × 250-11,600/-(மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
ரூபா 8000-5 × 250-9250/- (மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
ரூபா 3900/- நிலையானது (ஆண்டு ஒன்றுக்கு)

★ துறைத்தலைவரினாலும் பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர்(தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதிகாண் என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம என்பதுடன் துணைவேந்தர் அவரை ரூபா 4500/- 10x200-6,500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத் திட்டத்தில் வைக்க முடியும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்தி இப்பல்கலைக்கழக சிரேஷ்ட பதிவாளர்/ தாபனக்கிளையிலிருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். படிவங்களையும், ஏனைய விபரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 20/- காசுக்கட்டளை/ தபாற்கட்டளையை 23x10ச. மீ அளவுடைய சுயமுகவரி இட்டு முத்திரையொட்டப்பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்

பதிவாளர்,
யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம்.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992. 12. 03

(சி/5541)


எது எமக்கு மிகுந்த மனோரம்மியத்தைத் தருகின்றது.

நாம் பெற்றுக்கொண்ட விசுவாச வாழ்க்கை என்னும் அதி சிறந்த ஞான ஒளி அணைந்து விடா வண்ணம் கருணையம் கடவுள் ஆயராம் புனித நீக்கொலசை எமது பாதுகாவலனாக - எமது வழிகாட்டியாக - எமது மேய்ப்பனாக - எமது முன்மாதிரியாக எமக்குத் தந்துள்ளார். இப்பெரும் நன்மைக்காக தேவதந்தை தேவமைந்தன் தேவ ஆவி மூவரும் ஒருவரான எல்லாம் வல்ல இறைவனுக்கு இந்நாளில் நன்றிக்கீதம் பாடுகின்றோம்.

ஆயனாம் புனித நீக்கொலஸ் கடந்த நாட்களில் எமது ஆன்மீக மேய்ப்பனாக விளங்கி எம்மை ஆட்சிசெய்து வருவதன் காரணமாக ஏற்கனவே எம் மதியில் விதைக்கப்பட்ட நற்செய்தி வருடாவருடம் மாரி மழை எனப் பொழியப்படும் அருட்கொடைகளால் செழிப்புற்று வளர்ச்சி அடைந்து வருவதை நாம் தாழ்மையுடன் உணர்கின்றோம்.

### புனித நீக்கொலசின் சுகிர்த வாழ்வு

தருமவாளரான எப்பிப்பானுவினதும் யுவானாவினதும் மகனாக ஐரோப்பிய லீசிமா நகரின் பரிமள சரேரூபமாகப் பிரசவித்த புனித நீக்கொலஸ் தனது செவிலித்தாயின் பாலை புதன், வெள்ளி

(3364)

வாரி வழங்கியுள்ள கிறிஸ்மஸ் பப்பாவின் அதி உயர்வான பரிசுப் பொருட்களைக் கொண்டு இத்திருநாளில் இருகரங் குவித்து எம் புனிதருக்கு நன்றி பகர்கின்றோம்.

கடந்த நாட்களில் எம்மைப் பரிபாலனஞ் செய்த யாழ். ஆயர்கள் - சிறப்பாக எமது காலத்து ஆயர்களான காலஞ்சென்ற J. A. கியோமார் ஆண்டகை, ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை, ஓய்வுபெற்ற ஆயர் பேரருட் தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆகியோர் காலத்துக்குக் காலம் எமது பங்கிற்கு வருகை தந்து எம்மை விசுவாசத்தில் உறுதிப்படுத்தியதுடன் சிறந்த குருப்பிரசாதிகளை எமக்குத் தந்து எம்மை மீட்புப் பாதையில் முன்னேறச் செய்தமையும் இப்பெருவிழாவின்போது நன்றியுடன் நினைவு கூரத்தக்கனவாகும்.

மேலும் இன்றைய நாளில் எமது புதிய ஆயராம் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கட்கும் எமது அன்புக்குரிய பங்குத் தந்தை ஜோறவிஸ்சேவியர் அடிகளாருக்கும், மறை உரை ஆற்றிய அருட்தந்தை மற்றும் அருட்தந்தையர்களுக்கும், அருட்செல்விகளுக்கும் புனிதரின் ஆசியும், எமது பங்கு மக்களின் மனப்பூர்வமான பெருநாள் வாழ்த்துக்களும் என்றென்றும் உரித்தாகுக".

புனித நீக்கொலசுவே உமக்கு நன்றி

**மிருசுவில் பங்குமக்கள்**


# வெளிவந்து விட்டது

## 'போராளியின் குருதிச் சுவடுகள்'

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைபபுலிகள்' இதழ்களில் வெளிவந்த, மாவீரர்களின் வரலாறுகளைத் தாங்கிய நினைவுக் கட்டுரைகளின், முழுமையான தொகுபபு நூல்.




**எல்லா இடங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்**

[சி-5542]


## விண்ணப்பமுடிவு நீடிப்பு

[கொழும்பு]

வட கிழக்குப் பகுதிகளில் உள்ள மாவட்டங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றத்திற்குரிய விண்ணப்ப முடிவுத் திகதியை இம்மாதம் 30 ஆம் திகதிவரை நீடித்திருப்பதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்திருக்கிறார்.

இவ்வாறு இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கும் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இடமாற்றம் வழங்கப்படவிருக்கிறது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது

## வர்த்தகமாணவர் கருத்தரங்கு

இலங்கை வங்கியின் சகோதர நிறுவனமான "சிபாங்க் யுனிற்ரஸ்ற்" அறிமுகப்படுத்தி இருக்கும் "யுனிற்ரஸ்ற்" எனப்படும் நவீன முதலீட்டைப் பற்றிய கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் ஒன்பதாம் திகதி காலை 9-30 மணிக்கு யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வர்த்தகதுறைமாணவர்களுக்கு மிகவும் பயனளிக்கக்கூடிய மேற்படி முதலீட்டைப்பற்றிய கருத்தரங்கில் யாழ். பிராந்திய இலங்கை வங்கி அதிகாரிகள் பலர் விளக்கமளிக்கவுள்ளனர்.


# கொழும்பு ஸ்ரூடியோ

**55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்**

(சி-5518)


# நினைவு கூருகின்றோம் ...

## 1992-12-06

1988-ம் ஆண்டு இதே தினத்தில் யாழ் கரவெட்டி, தச்சன்தோப்பில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப் சுருளி (முருகன் சிவராசா- காட்டுப்புலம், கரவெட்டி கிழக்கு- யாழ் )

1989 ம் ஆண்டு பளுகாமம் பகுதியில் தேசவிரோதிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

கப்டன் றொபேட் (சங்கரப்பிள்ளை கருணாகரன்- கடற்கரை வீதி, காரைதீவு- 02 அம்பாறை)

கோல்ட் (கணபதி ரவி- பாண்டிருப்பு, கல்முனை- அம்பாறை)

வேணு (குஞ்சுத்தம்பி தயாளன் - கொம்மாதுறை, செங்கலடி- மட்டு. )

சியாத் (மீராசாகிபு காலிதீன்- 552- பழையசந்தை வீதி, சாய்ந்தமருது- மட்டு. )

யசோ (செல்லையா தங்கராசா- கிராமசபைவீதி, தம்பிலுவில்- 02- அம்பாறை)

அஸ்வர் (ஜபார் ஜபீர்- அட்டாளைச்சேனை-மட்டு. )

1990-ம் ஆண்டு பருத்தித்துறை நகர்ப்பகுதியில், சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதல்களில் கொல்லப்பட்ட கற்கோவளத்தைச் சேர்ந்த பெண், மயிலிட்டியைச் சேர்ந்த இருவர், மற்றும் ஆசிரியர் உட்பட 5- தமிழர்கள்.

சாவகச்சேரி, சரசாலைப்பகுதி பல நோ.கூ. சங்கத்தில் நிவாரணம் பெறுவதற்காக நின்ற மக்களின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட வயோதிபப் பெண்.

பலாலி முகாமிலிருந்து உரும்பராய்ப் பகுதி பொதுமக்கள் குடியிருப்புகளை நோக்கி சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட தாய், மகன்.

மட்டக்களப்பு -ஆரையம் பகுதியில் தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொது மகன் 35-ம் கிராமத்தில் மரம்வெட்டச் சென்றபோது சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 - தமிழர்கள். கல்குடாப் பகுதிக்குச் செல்லும் வழியில் தேசவிரோதிகளால் கைது செய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட கல்குடா மகாவித்தியாலய அதிபர்.

1991 ஆம் ஆண்டு திருக்கோணமலையில், பல கிராமங்களைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரின் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியான தமிழ்ப்பொது மகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5536)

### சிந்தனைக்கு

உசிதம் என்று கருதி, சுதந்திரம் சிறிது சிறிதாக அரிக்கப்படுவதில்தான் ஆபத்தும் இருக்கிறது.

— எட்மண்ட்பர்க்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் - 06-12-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2309

க. பெ. எண் - 05

## சம்பிரதாயபூர்வவிசாரணை

"லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மறைவு சம்பந்தமாக ஆராயப்படவிருக்கும் சர்வதேச ஆணைக்குழு தொடர்பாக திருமதி லலி. கொப்பேகடுவவிடமிருந்து பதில் கிடைத்ததும் அக்குழு எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பது ஆராயப்படும்" என அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். மேலும் அவர் இவ்விசாரணைக்கு கொல்லப்பட்ட லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மனைவி லலி. கொப்பேகடுவ கோரியதினால் இணங்கினோம் எனவும் குறிப்பிட்டார்.

அதாவது, டென்சில் கொப்பேகடுவ கொல்லப்பட்டமை தொடர்பாக ஏற்கனவே ஒய்வு பெற்ற நீதியரசர் இஸ்மயில் தலைமையிலான தனிநபர் ஆணைக்குழு விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்தது. அதன் ஒரு பகுதி வெளியிடவும்பட்டது. ஆனால் தற்பொழுது அதே விவகாரம் தொடர்பாக சர்வதேச ஆணைக்குழு ஒன்று அமைப்பதற்கு திரு. பிரேமதாசா தலைமையிலான அரசாங்கம் இணங்கியுள்ளது. சிறிலங்கா அரசாங்கம் இவ்வாறு இணங்கியுள்ளமையானது சிறிலங்காவின் நீதித்துறையின் நம்பிக்கைத்தன்மை குறித்து பெரும் கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளதோடு, சிறிலங்கா இதுவரை நியமித்த ஆணைக்குழுக்களின் தீர்ப்புகள் குறித்து எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நியாயபூர்வமற்றவை எனத் தட்டிக் கழிக்க முடியாத நிலையையும் உருவாக்கியுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் தமிழருக்கு இழைத்து வரும் அநீதிகள் குறித்து சர்வதேச மட்டத்திலான விசாரணை நடாத்தப்பட வேண்டும் என பலராலும், பலதடவை கோரப்பட்டு வந்துள்ளது. யாழ். நூலகம் அரச படையினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டமை, யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாடு திட்டமிட்ட ரீதியில் பொலிசாரால் குழப்பப்பட்டமை, தமிழருக்கு எதிராக காலத்திற்குக் காலம் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரங்கள், இராணுவத்தினர் தமிழர் பிரதேசங்களில் புரிந்த படுகொலைகள் மற்றும், தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்தும் சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கோரப்பட்டது. ஆனால், சிங்கள அரசாங்கம் அது குறித்து எதுவித சர்வதேச விசாரணைக்குழு எதையும் அமைப்பதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை.

மாறாக, சர்வதேச அமைப்புகளின் நிர்ப்பந்தத்தின் காரணமாக சில படுகொலைகளுக்கு மட்டும் தனிநபர் ஆணைக்குழுக்களை

# வயிற்றோட்டம் தொடர்பான நோய்களும் அதன் கட்டுப்பாடும்

வைத்தியகலாநிதி பொ. இரத்தினசபாபதி

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்

### 1. பிரச்சினையின் தாக்கம்

வயிற்றோட்டம் காரணமாக நீரும், ஜீவ உப்புக்களும் மலத்துடன் வெளியேறுவதினால் உடலில் உலர்வு அல்லது வரட்சி ஏற்படுகிறது. உலகில் வருடா வருடம் சுமார் 35 இலட்சம் பிள்ளைகள் வயிற்றோட்டத்தினால் ஏற்படும் உடல் உலர்வால் மரணிக்கின்றனர். போசாக்கின்மையை ஏற்படுத்தும் பிரதானமான காரணிகளுள் வயிற்றோட்டம் மிகவும் முக்கியமானதாகும்.

எமது பிரதேசத்தில் கடந்த சில மாதங்களாகப் பல நூற்றுக்கணக்கான மக்கள் இந்நோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள். யாழ்ப்பாணம் பிரதம வைத்தியசாலை குழந்தைகள் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படுவோரில் 30%க்கு மேலானோர் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டோராவர் இவ் வைத்தியசாலையில்கடந்தஅக்டோபர் மாதத்தில் மாத்திரம் 20 குழந்தைகள் இறந்திருக்கிறார்கள். நவம்பர்மாதம் 26-ம் திகதிக்கிடையில் 185 குழந்தைகள் இந்நோய் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 14 குழந்தைகள் மரணித்திருக்கிறார்கள்.

வயிற்றோட்டம் மக்கள் மத்தியில் ஓர் முன்னணிப் பிரச்சினையாக இருக்கிறது என்பதை எமது கவனத்திற்கு எடுத்தல் வேண்டும்.

### 2. பராமரிப்பின் அவசியம்

சரியான பராமரிப்பு அளிக்கும் சந்தர்ப்பத்தில் எவரும் இந்நோய் காரணமாக இறக்க வேண்டிய நிலைமை ஏற்படமாட்டாது. தற்போதைய போர்க்காலச் சூழலினால் மக்கள் இடம் பெயர்வு, அகதி முகாம், மற்றும் வீடுகளில் நெருக்கடியான வாழ்க்கை நிலைமை, அசுத்தமான சுற்றாடல், சுத்தமான குடிநீர் கிடைக்காமை, வயிற்றோட்ட நோய் கூடுதலாகப் பரவுவதற்கு முக்கிய காரணிகளாக அமைகின்றன.

### 3. நோய்த்தடையில் 7 முக்கியசெய்திகள் உண்டு.

இப்பிரதான தகவல்கள் வயிற்றோட்டம் காரணமாக நிகழும் எல்லா மரணங்களையும் தவிர்த்துக் கொள்வதற்குப் பெரும்பாலும் உதவுகின்றன. அதேபோன்று இத்தகவல்கள் போசாக்கின்மையைக் கணிசமான அளவு குறைப்பதற்கும், வேண்டிய நடவடிக்கையை எடுப்பதற்கும் பெற்றோருக்கும், சமூகத்தினருக்கும் உதவுகின்றன,

அரசாங்க இலாகாவினர், அரசு சார்பற்ற நிறுவனங்கள் சமூக சேமநல மன்றங்கள் முதலானோர் இவ்விடயத்தில் முன்னின்று உழைக்க வேண்டியவர்களாவர்.

4. ஒவ்வொரு குடும்பமும், சமூகமும் வயிற்றோட்டம் தொடர்பாக அறிந்திருக்க உரிமையுண்டு. பிரதான செய்திகளாவன:

4:1. வயிற்றோட்டத்தின் போது பெருமளவு நீரிழப்பு ஏற்படுவதனால் சிறுவர்களில் மரணங்கள் சம்பவிக்கின்றன. எனவே வயிற்றோட்டத்தின் போது குழந்தைக்கு போதிய ளவு நீராகாரம் கொடுத்தல் வேண்டும்.

- ★ தாய்ப்பால், பொரி அரிசிக் கஞ்சி, கஞ்சித்தெளிவு, சூப போன்றவை பொருத்தமான நீராகாரங்களாகும்.
- ★ இவை கிடைக்காவிடின் பிரதியீடாக — பழச்சாறு கலந்த நீர் (தேசிக்காய்) சாயம் குறைவான தேநீர், இளநீர்போன்றவைகளைக் கொடுக்கலாம்.
- ★ இவையேதும் கிடைக்காவிடின் துப்புரவான நீர் (முடியுமாயின் கொதித்தாறியவை).
- ★ வயிற்றோட்டம் முற்றாக நிற்கும்வரை நீராகாரம் தொடர்ந்து கொடுத்தல் வேண்டும். பொதுவாக வயிற்றோட்டம் கட்டுப்பட 3 தொடக்கம் 5 நாட்கள் செல்லும். (மலத்துடன் சீதம், இரத்தம் காணின் சிகிச்சைபெற வைத்தியரை நாடவும்.)

ஜீவனி விசேட பானம்

''உடல் உலர்வு'' ஏற்படும் பட்சத்தில் வழங்கவேண்டிய ஓர் மருந்துக் கரைசல் 'ஜீவனி' ஆகும் ஜீவனியை அரச வைத்தியசாலைகள் மருந்தகங்கள் வெளிக்கள சுகாதார இலாகா ஊழியர்களிடம் இலவசமாகப் பெறமுடியும். ஆங்கில மருந்துக்கடைகளில் பணம் செலுத்திப் பெறலாம்.

ஒரு லீற்றர் நீரில், ஒரு பைக்கற் ஜீவனியை (ஒரு பைக்கற் உள்ளிருக்கும் இரு சிறிய பைக்கற்றுக்களும்)க் கரைத்து வரட்சி ஏற்படும் நோயாளிக்குக் கொடுக்கலாம்.

குறிப்பு; (ஒரு லீற்றர்—2½ யானைச் சோடாப்போத்தல் அல்லது 1 1/3 சாராயப்போத்தல் அல்லது 5 ரம்ளரில் அடங்கிய நீர்.)

4:2. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு வயிற்றோட்டம் ஏற்படின் தாய்ப்பால் தொடர்ந்து கொடுத்தல் வேண்டும். புட்டிப்பாலாகில் இருமடங்கு நீரில் குறிப்பிட்டளவு மாவைக் கரைத்துக் கொடுத்தல் வேண்டும்

4:3. வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைக்கு உணவு தேவை. நன்றாக வேகவைத்த சோறு, றோஸ் பாண், வேகவைத்து நசித்த காய்கறிகள், இடியப்பம் சொதி போன்றவற்றைக் கொடுக்கலாம்.

4:4. வயிற்றோட்டத்தின் போது கடுமை நிலைமை அவதானிக்கில் பயிற்றப்பட்டோரின் அல்லது வைத்தியரின்உதவியை நாடுங்கள்.

கடுமைநிலைகளாவன:-

கடும் உடல் உலர்வு (அதாவது அதிக தாகம், குழி விழுந்த கண்கள், அழும் போது கண்ணீர் வராமை, சலம் கழிக்காமை முதலியன)

- காய்ச்சல் காணப்படல்:-

உணவோ குடிபானமோ அருந்தமுடியாமை, அடிக்கடி வாந்தியெடுத்தல் முதலியன.

4:5. வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு இலேசாகச் சீரணிக்கக்கூடிய உணவுகள் வழமையிலும்கூடத் தேவை. எனவே குறைந்தது ஒருவாரகாலத்திற்கு தினமும் அதற்கு ஒருவேளை ஆகாரம் கூடுதலாக ஊட்டல் வேண்டும்.

4:6. வயிற்றோட்டம் ஏற்படின் எவ்வித மருந்தும் வைத்திய ஆலோசனையின்றிக் கொடுக்கக்கூடாது.

4:7. தாய்ப்பால் கொடுத்தல், குழந்தைகளுக்குச் சின்னமுத்துத் தடைமருந்தேற்றல், மலகூடம் சரிவரப் பாவித்தல், உணவு-நீர் துப்புரவு பேணல், உணவைத் தொடமுன் கைகளை நன்றாகக் கழுவுவதன் மூலம் இந் நோயைக் கட்டுப்படுத்தலாம் ஏனைய தகவல்களாவன-

அ) குழந்தை பிறந்தது முதல் 4 தொடக்கம் 6 மாதங்கள் வரை தாய்ப்பால் மாத்திரமே கொடுத்தல்

ஆ) 4 தொடக்கம் 6 மாத காலப்பகுதியில் குழந்தைக்குச் சுத்தமான போசாக்கு மிக்க நன்கு வேகவைத்து நசித்த உணவுவகைகளைக்கொடுக்கத் தொடங்குதல்.

இ) புட்டிப்பால் கொடுப்பதாயின் அதனைச் சூப்பி-போத்தலில் கொடுப்பதிலும் பார்க்க, கோப்பையும்-கரண்டியும் பாவித்தல். நீராகாரம் அல்லது குளிர்பானங்களுக்குப் பாவிக்கும் நீர் துப்புரவானதாக இருத்தல் வேண்டும். கிணறு, குளம், ஆற்றுநீர் பாவிப்பதாகில் கொதித்து ஆறிய நீரே பாவித்தல் வேண்டும்.

ஈ) மலசலம் கழிப்பதற்கு மலகூடத்தையே பாவித்தல் வேண்டும். குழந்தைகளின் மலத்தையும் வெட்டிப்புதைத்தல் வேண்டும். (சிறுவர்களின் மலம் பெரியோர்களின் மலத்தை விட ஆபத்தானது என்பதைக் கருத்திற் கொள்ளல் வேண்டும்.)

உ) மலசலம் கழித்த பின்பும் உணவு தயாரிக்க முன்னரும், உணவு உட்கொள்ள முன்னரும் கைகளைச் சவர்க்காரம் உபயோகித்துக் கழுவுதல் வேண்டும்.

ஊ) உணவு, நீர் முதலியவற்றைக் கிருமிகளில் இருந்து பாதுகாக்க, அவற்றை நன்கு மூடி வைத்திருத்தல் வேண்டும்.

எ) முடியுமானவரை உணவு வகைகளை நன்கு வேக வைத்தல் வேண்டும்.

ஏ) ஈக்கள் பரவுவதைத் தடுப்பதற்கு குப்பை கூழங்கள் அனைத்தையும் எரித்தல் வேண்டும்; அல்லது புதைத்தல் வேண்டும்;

★ சின்னமுத்து காரணமாக பெரும்பாலும் வயிற்றோட்டம் ஏற்படும் வாய்ப்புண்டு. எனவே இந்நோயில் நின்று சிசுக்களைக் காப்பாற்ற சின்னமுத்துத் தடை ஊசி பெறல் வேண்டும்.

★. சாதாரண வயிற்றோட்டத்தைத் தடுப்பதற்கு இதுவரை எந்தவித தடை மருந்தும்கண்டுபிடிக்கப்படவில்லை.

நன்றி: உலக சுகாதார ஸ்தாபனக் கைநூல்

## ஜெயலலிதாவின் பாதுகாப்பு தொடர்ந்து வழங்கப்படும்

தமிழக அரசிற்கு தேவைப்படும் வரை தேசிய பாதுகாப்புப் படையணியினர் தமிழக முதல்வரின் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், இப்போது

## அங்கீகாரம்

[சென்னை]

தமிழக முன்னாள் அமைச்சர் எஸ். திருநாவுக்கரசு தலைமையிலான அண்ணா, புரட்சித் தலைவர் தமிழக முன்னேற்றக் கழகத்தை எம்:

## இந்தியா செல்வதை தவிர்க்க பாகிஸ்தான் கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுக்கு பிரயாணம் ... அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இரு பாகிஸ்தானியர்களின்

குற்றச்சாட்டுக்கள் நியாயபூர்வமற்றவை எனத் தட்டிக் கழிக்க முடியாத நிலையையும் உருவாக்கியுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் தமிழருக்கு இழைத்து வரும் அநீதிகள் குறித்து சர்வதேச மட்டத்திலான விசாரணை நடாத்தப்பட வேண்டும் என பலராலும், பலதடவை கோரப்பட்டு வந்துள்ளது. யாழ். நூலகம் அரச படையினரால் திட்டமிட்டுக் கொளுத்தப்பட்டமை, யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாடு திட்டமிட்ட ரீதியில் பொலிசாரால் குழப்பப்பட்டமை, தமிழருக்கு எதிராக காலத்திற்குக் காலம் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரங்கள், இராணுவத்தினர் தமிழர் பிரதேசங்களில் புரிந்த படுகொலைகள் மற்றும், தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்தும் சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கோரப்பட்டது. ஆனால், சிங்கள அரசாங்கம் அது குறித்து எதுவித சர்வதேச விசாரணைக்குழு எதையும் அமைப்பதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை.

மாறாக, சர்வதேச அமைப்புகளின் நிர்ப்பந்தத்தின் காரணமாக சில படுகொலைகளுக்கு மட்டும் தனிநபர் ஆணைக்குழுக்களை அமைத்தது. ஆனால் இவ் ஆணைக்குழுக்கள் முழுமையான விசாரணைகள் எதையும் மேற்கொண்டதாக இல்லை. அத்தோடு. இவ் விசாரணைக் குழுக்களின் தீர்ப்புக்கள் தொடர்பான முழு அறிக்கையும் அரசாங்கத்தினால் வெளியிடப்படவும் இல்லை. இவற்றிற்கும், மேலாக இவ்விசாரணைக் குழுக்கள் எப்பொழுதும் குற்றவாளிகளைப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டாமல், அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பனவையாகவே இருந்தன. சில சமயங்களில் பாதிக்கப்பட்ட சிலருக்கு குறைந்தளவு நட்ட ஈட்டைக் கொடுப்பதற்கு சிபார்சு செய்வதோடு தமது எல்லையை விசாரணைக் குழுக்கள் சுருக்கிக் கொண்டன.

அதாவது தமிழருக்கு எதிராகச் சிங்கள இராணுவம் மேற்கொள்ளும் அட்டூழியங்கள் குறித்து 'சம்பிரதாய பூர்வமாக' விசாரிக்கும் ஓர் அம்சமாகவே இவ் ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. அநேக வேளைகளில் பாதிக்கப்பட்டவர்களின் கருத்துக்களைக் கூட ஆணைக்குழுக்கள் கேட்டு அறியத் தவறின. அதேவேளை எதிரியின் தரப்பில் கூறப்பட்ட சித்த சுவாதீனம், வெய்யிலினால் ஏற்பட்ட பாதிப்பு, உணர்ச்சி வசப்பட்ட நிலையில் ஏற்பட்ட சம்பவம் போன்ற சகலவற்றையும் விசாரணைக் குழுவினர் ஏற்றுக் கொண்டனர். சிலவேளைகளில் குற்றவாளிகளுக்காக ஆணைக்குழுவே காரணங்களும் கற்பிக்க முற்பட்டது.

ஆனால் இவை குறித்துத் தமிழர்களினால் பல தடவை சுட்டிக்காட்டப்பட்டு வந்துள்ளது. ஆனால் சிங்கள அரசாங்கம் இதனைக் கருத்திற் கொண்டதாக இல்லை.

ஆனால் இன்று டென்சில் கொப்பேகடுவவின் மரணம் குறித்து சர்வதேச விசாரணைக் குழு ஒன்றை அமைக்க அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது. தமது அரசியல் நலனுக்கு ஆபத்து விளைந்து விடுமோ என்ற அச்சமே இவ் அவசர முடிவிற்குக் காரணமே ஒழிய இரு. பிரேமதாசாவிற்கு நீதித்துறை மீதுள்ள பற்றோ, அன்றி திருமதி கொப்பேகடுவவிற்கு உண்மை நிலையை விளங்கப்படுத்தி அவரைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற பேரவாவோ அல்ல. உண்மையில் சகலருக்கும் சமநீதி என சிங்கள அரசு எண்ணுமானால் இதற்கு முன்னரே பல சர்வதேச விசாரணைகளை இலங்கை கண்டிருக்கவேண்டும்.

வேண்டிய நிலைமை ஏற்பட மாட்டாது. தற்போதைய போர்க்காலச் சூழலினால் மக்கள் இடம் பெயர்வு, அகதி முகாம், மற்றும் வீடுகளில் நெருக்கடியான வாழ்க்கை நிலைமை, அசுத்தமான சுற்றாடல், சுத்தமான குடிநீர் கிடைக்காமை, வயிற்றோட்ட நோய் கூடுதலாகப் பரவுவதற்கு முக்கிய காரணிகளாக அமைகின்றன.

...சூப் போன்றவை பொருத்தமான நீராகாரங்களாகும்.

★ இவை கிடைக்காவிடின் பிரதியீடாக — பழச்சாறு கலந்த நீர் (தேசிக்காய்) சாயம் குறைவான தேநீர், இளநீர்போன்றவைகளைக் கொடுக்கலாம்.

★ இவையேதும் கிடைக்காவிடின் அப்புரவான நீர் (முடியுமாயின் கொதித்தாறியவை).

★ வயிற்றோட்டம் முற்றாக

...நீரில் குறிப்பிட்டளவு மாவைக் கரைத்துக் கொடுத்தல் வேண்டும்

4:3. வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைக்கு உணவு தேவை. நன்றாக வேகவைத்த சோறு. றொஸ்பாண், வேகவைத்து நசித்த காய்கறிகள், இடியப்பம் சொதி போன்றவற்றைக் கொடுக்கலாம்.

4:4. வயிற்றோட்டத்தின் போது கடுமை நிலைமை அவ

அ) குழந்தை பிறந்தது முதல் 4 தொடக்கம் 6 மாதங்கள் வரை தாய்ப்பால் மாத்திரமே கொடுத்தல்

ஆ) 4 தொடக்கம் 6 மாத காலப்பகுதியில் குழந்தைக்குச் சத்தமான போசாக்கு மிக்க நன்கு வேகவைத்து நசித்த உணவுவகைகளைக்கொடுக்கத் தொடங்குதல்.

இ) புட்டிப்பால் கொடுப்ப தாயின் அதனைச் சூப்பி- போத்தலில் கொடுப்பதிலும்

...டம் ஏற்படும் வாய்ப்புண்டு. எனவே இந்நோயில் நின்று சிசுக்களைக் காப்பாற்ற சின்ன முத்துத் தடை ஊசி பெறல் வேண்டும்.

★ சாதாரண வயிற்றோட்டத்தைத் தடுப்பதற்கு இது வரை எந்தவித தடை மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை.

நன்றி: உலக சுகாதார ஸ்தாபனக் கைநூல்

# ஜெயலலிதாவின் பாதுகாப்பு தொடர்ந்து வழங்கப்படும்

தமிழக அரசிற்கு தேவைப்படும் வரை தேசிய பாதுகாப்புப் படையணியினர் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் பாதுகாப்புக் கடமைகளை நிறைவேற்றுவர் என்று மத்திய உள்துறை அமைச்சு தமிழக அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளது

தேசிய பாதுகாப்புப் படையின் மூன்றிலொரு பங்கினர் தமிழக முதல்வரின் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், இப்போது அதைப் போல இருமடங்கு எண்ணிக்கை கொண்ட படையணி தமிழக முதல்வரின் பாதுகாப்பிற்கென மத்திய அரசால் அனுப்பப்பட்டிருப்பதாகவும் தமிழக அரசின் உத்தியோகபூர்வ செய்திக் குறிப்பு ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

# தேசிய அரசு அமைக்க பிஜீ பிரதமர் அழைப்பு

பிஜீ நாட்டு மக்களின் உத்தேச தேசிய அரசில் சேர்ந்து கொள்ளுமாறு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களையும், பிற அரசியல்வாதிகளையும் பிரதமர் சித்வேனி ரபூக்கா அழைத்துள்ளார். அவர் இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசுகையில்; மேலும் புதிய தேசிய அரசு அமைப்பது தொடர்பில்தேவைப்பட்டால் தான் பதவி விலகவும் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்

கேணல் சித்வேனி ரபூக்கா 1987 இல் இராணுவப் புரட்சி மூலம் அதிகாரத்துக்கு வந்தவர்என்பதும், இந்தியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்கத்தை அகற்றினார் என்பதும் இவ் ஆண்டு ஜூன் மாதத்தில் பிஜீயின் பிரதமராக பொறுப்பேற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அயோத்தியாவில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது

(டில்லி)

அயோத்தியாவில் இன்று கரசேவை எனப்படும் ஆலயத் திருப்பணிகள் ஆரம்பமாகஇருப்பதை ஒட்டி பாதுகாப்பை பலப்படுத்தும் முகமாக வெடிகுண்டு அகற்றும் அணிகளும், மோப்ப நாய்களும் உத்தரப் பிரதேசத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசினால் அனுப்பப்பட்ட இப் படையணிகளை மாநில அரசும் ஏற்றுக்கொண்டது. இவ் இரண்டு படையணிகளும் தற்போது பைசாபார்த்நகரத்தை சென்றடைந்துள்ளது.

மேலும் இத்திருப்பணி வேலைகள் ஆரம்பமாவதை முன்னிட்டு தலைநகரிலும் ஏதும் அசம்பாவிதங்கள் நிகழலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால் பாதுகாப்பும், ரோந்துப் பணிகளும் பலமாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உத்தரப் பிரதேச அரசினால் கையகப்படுத்தப்பட்ட நிலம் தொடர்பான வழக்கின்தீர்ப்பு வெள்ளியன்று வெளியிடப்பட்ட பின்பு ஆலயத் திருப்பணிக்கான அடுத்த கட்ட யுக்தி வரையப்படும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல். கே அத்வானி செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார். அத்துடன் அரசியலமைப்புச் சட்டத்தை தமது கட்சி ஒரு போதும் மீறாது என்றும்அவர் குறிப்பிட்டார்.

## அங்கீகாரம்

[சென்னை]

தமிழக முன்னாள் அமைச்சர் எஸ். திருநாவுக்கரசு தலைமையிலான அண்ணா, புரட்சித் தலைவர் தமிழக முன்னேற்றக் கழகத்தை, எம்: ஜி ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் மாற்றம் செய்வதற்கு தேர்தல் கமிஷன் ஒப்புதல் அளித்துள்ளது.

# 1,38,000பேர் இதுவரை பலி

(பெல்கிரேட்)

யூகோஸ்லாவியாவில்கடந்த வருடம் உள்நாட்டுச் சண்டை தொடங்கியதிலிருந்து இன்று வரையில்1,38,000 பேர் உயிர் இழந்திருப்பதாகவும், அதில் 12.000 பேர் வரையில் குழந்தைகள்என்றும்கூறப்படுகிறது.

# பழனியில் இடைத் தேர்தல்

[டில்லி]

தமிழ்நாட்டிலுள்ள பழனி தேர்தல் தொகுதிக்கான இடைத்தேர்தல் பெப்ரவரி மாதம் நடாத்தப்படவுள்ளது இதேவேளை மூன்று மாநிலங்களிலுள்ளலோக்சபாதொகுதிகளுக்கும், பதினாறு சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும், மேகாலயா. திரிபுரா சட்டப் பேரவைகளுக்கும் பெப்ரவரியில் தேர்தல் நடாத்தப்படவுள்ளது தமிழ்நாட்டில்பழனி, கேரளத்தில் ஒட்டப்பாலம், பஞ்சாப்பில் ஜலந்தர் ஆகிய லோக்சபாத் தொகுதிகளுக்கான தேர்தல்கள் ஒரே திகதியில் நடாத்தப்படவுள்ளது.

# பாதுகாப்பளிக்க உத்தரவு

(வாஷிங்டன்)

பட்டினியால் வாடும் லட்சக்கணக்கான சோமாலியா மக்களுக்கு உணவு கொண்டு செல்லும் வாகனங்களுக்கு பாதுகாப்பு அளிக்குமாறு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அமெரிக்கப் படையினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# இந்தியா செல்வதை தவிர்க்க பாகிஸ்தான் கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுக்கு பிரயாணம் செய்வதை தவிர்த்துக் கொள்ளும்படி பாகிஸ்தான் தனது பிரஜைகளைக்கேட்டுக்கொண்டுள்ளது. அத்துடன் இந்தியாவிலிருக்கும் பாகிஸ்தான் பிரஜைகளை நாடு திரும்புமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இரு பாகிஸ்தானியர்களின் சடலங்களை இந்தியா கையளிக்கவில்லை என்பதால் மேற்கொள்ளப்படும் ஒரு வழமையான பாதுகாப்பு நடவடிக்கையே இது என்றும் கூறப்படுகிறது.

# பிணையாட்கள் விடுதலைக்கு கெமர்ரூச் தளபதி உத்தரவு

(நொம்பென்)

கம்போடியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் பிணையாட்களாகப் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் ஐ. நா. அமைதிப் படையைச் சேர்ந்த ஆறு பேரையும் விடுதலை செய்யும்படி கெமர்ரூச் அமைப்பின் மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் உத்தரவிட்டுள்ளார். இந்த ஆறுபேரில் மூவர் பிரிட்டனையும், இருவர் பிலிப்பைன்சையும், மற்றவர் நியூசிலாந்தையும் சேர்ந்தவர்களாவர். கெமர்ரூச் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்கான வர்த்தகத் தடையை ஐ. நா. அமைதிப் படையினர் அமுல்படுத்தி வருவது தெரிந்ததே.

# பாலஸ்டிக் ஏவுகணைகள் பாகிஸ்தான் கொள்வனவு

(இஸ்லாமாபாத்)

சீனாவிடமிருந்து நவீனரக பாலஸ்டிக் ஏவுகணைகளை பாகிஸ்தான் கொள்வனவு செய்திருப்பதாக, வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை கூறியுள்ளது. புஷ் நிர்வாக அதிகாரிகளை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்டிருக்கும் இச் செய்தியில் மேலும் தெற்காசியாவில் இது புதிய சவால்களை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

## பொஸ்னியாமீது ஐ. நா. விதித்த

# ஆயுதத்தடையை நீக்குக ஈரான் வற்புறுத்துகிறது

(ஜித்தா)

பொஸ்னியா மீது ஐக்கிய நாடுகள் சபை விதித்துள்ள ஆயுதத் தடையை நீக்குமாறு ஈரான் ஐக்கியநாடுகள் சபையை வற்புறுத்தி யிருக்கிறது.

செர்பியப் படைகளிடம் அதிகளவு ஆயுதங்கள் இருப்பதாகக் கூறும் ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஆயுதத் தடையை நீக்கும்படி ஐக்கிய நாடுகள் சபையிடமும், சர்வதேச சமூகங்களிடமும் தாம் கேட்டுக்கொண்டதாக நிருபர்களிடம் தெரிவித்தார். பொஸ்னியாவிடயத்தில் அனைத்து முஸ்லிம் நாடுகளும் இணைந்து செயற்படவேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அதேவேளை மேற்படி தடை உத்தரவுநீக்கப்பட்டதும் சர்வதேச சட்டத்தை மீறாதவகையில் ஆயுதங்களையும் ஆட்களையும் பொஸ்னியாவுக்கு அனுப்பிவைப்பதற்கு ஈரான் தயாராக உள்ளதாகவும் ஈரான் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

ஈழநாதம்

# ஜே. வி. பி. யிடமிருந்து கைப்பற்றிய பொருள்களை கொண்ட நூதனசாலை

## -உடன் அமைக்க பிரேமா பணிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி. தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களைப் பயன்படுத்தி நூதனசாலை ஒன்றை அமைப்பதற்கு அரசு அவசர நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

இதற்கான பணிப்புரையை ஜனாதிபதி விடுத்திருக்கிறார்.

பல்வேறு பகுதிகளிலுமுள்ள ஜே.வி.பி. தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், ஆவணங்கள் மற்றும் அசையும் அசையாச்சொத்துக்களைக் கொண்டதாக இந்த நூதனசாலை அமையும். இங்கு தீவிரவாதிகள் பயன்படுத்திய சீருடைகள், படச்சுருள்கள், ஒலிப்பதிவு நாடாக்கள், நீதிமன்றப் பதிவேடுகள். போன்ற பல்வேறு பொருள்கள்வைக்கப்பட்டிருக்கும். இது ஜே.வி.பி. தீவிரவாதிகள் பயன்படுத்திய பங்களா ஒன்றில் அமைக்கப்பட இருக்கிறது.

தீவிரவாதிகளிடமிருந்துமீட்கப்பட்ட பெறுமதிமிக்க சொத்துக்களை விற்பனைசெய்வதன் மூலம் இந்த நூதனசாலையை அமைப்பதற்கான பணம் பெற்றுக் கொள்ளப்படும்.

### பரீட்சை பின்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பரீட்சை இம்மாதம் 28 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது. இப்பரீட்சை இம்மாதம் 21 ஆம் திகதி நடைபெற இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனை யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (யா)

## 111 தாதியர்களுக்கு சம்பளப்பணம் இல்லை

[யாழ்ப்பாணம்]

யாழ் போதனா வைத்திய சாலையில் தற்காலிகமாகக் கடமையாற்றிய சுமார் 111 தாதியர்களுக்குரிய சம்பளப் பணம் வழங்கப்படவில்லை.

இத்தாதியர்களுக்குரிய சம்பளப்பணம் வழங்கப்படமாட்டாதென்று மேற்படிவைத்திய சாலைப் பணிப்பாளர் அறிவித்திருக்கிறார் இவ்வைத்திய சாலையின் தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி முடித்துக்கொண்டவர்களில் சுமார் 111 பேர் மேற்படி வைத்திய சாலையில் கடந்த 1-8-92 முதல் ஒரு மாத காலம் தற்காலிகமாகக் கடமையாற்றியுள்ளனர். இவர்கள் இவ்வாறு தற்காலிகமாக நியமிக்கப்படும் போது கடமைக்கான சம்பளம் வழங்கப்படும் என்று உத்தியோகபூர்வமாக எழுத்துமூலம் இவ்வைத்தியசாலைப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை இவ்வைத்திய சாலையின் தாதிகள் பயிற்சி நிலையத்தில் பயிற்சியை முடித்து வெளியேறிய சுமார் 15 தாதியர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின்கீழ் இயங்கும்மருத்துவமனைகளில் இதேகாலப் பகுதியில் கடமையாற்றியுள்ளனர் இவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## மனையியல் ஆசிரியர் விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

மனையியல் ஆசிரியர்களை நியமிப்பதற்காக மனையியல் டிப்ளோமா பயிற்சி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களாகவும் 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்களாகவும் உள்ளவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இத்தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் கல்விச் சேவைச் சபைக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அம்பாறை, திருக்கோணமலை, வவுனியா, பதுளை, மொனராகலை, அனுராதபுரம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களிலேயே தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.


யாழ். மாவட்ட

இறைச்சிக்கடை உரிமையாளர் சமாசம்

முக்கிய அறிவித்தல்

இவ்வருட (1992) மார்கழி மாத இறுதிப் பொதுச் சபைக் கூட்டம் உபதலைவர் திரு க தங்கராசா தலைமையில் நாளை (7-12-92) திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு இல. 9, சின்னக்கடை வடக்கு வீதிக்


### தபாலகத்தில் திருட்டு

[வடமராட்சி]

கரவெட்டி தபாலகத்தில் கடந்த வியாழக்கிழமை இனம் தெரியாதவர்களால் 4800 ரூபா பெறுமதியான வான் கடிதங்கள் திருடப்பட்டுள்ளன.

பாதுகாப்பற்ற இவ்வலுவலகத்தில் பாதுகாப்பான முத்திரை அலுமாரி உடைக்கப்பட்டு மேற்படி பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக தபாலதிபர் திரு. எஸ். சிவராசலிங்கம் பருத்தித்துறை காவல்துறையில் முறைப்பாடு செய்துள்ளார். [யோ]

### வடமராட்சியில் 132 மாணவர் சித்தி

(வடமராட்சி)

வடமராட்சிக் கல்விக்கோட்டப் பிரிவில் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 132 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி மாணவி செல்வி சிவராசா சுகந்தினி 191 புள்ளிகளைப் பெற்று வடமராட்சியில் முன்னணி நிலையில் சித்தியடைந்துள்ளார். (யோ)

### நம்பிக்கை

நம்பர் விசாரணைக் கமிஷன் மூலம் விசாரணை நடத்தியது இன்று மக்களுக்கு உண்மை தெரிந்து போய்விட்டது. அதனால் மக்கள் கிளர்ந்து எழும்புவார்கள் என்ற அச்சத்தினாலே இந்த விசாரணைக்கு உடன்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

கொடபே கடுவவின் மரணத்தைத் தொடர்ந்து எழுந்துள்ள பிரச்சினையில் இருந்து விடுபட முடியாமல் திண்டாடுகின்றது. எனவே எதிர்க் கட்சிகளாகிய நாம் இன்று மக்களுக்கு உண்மை நிலை வெளிப்படுத்த எம்மால் ஆன முயற்சிகளை மேற்கொள்ளுகின்றோம்.

கமிஷன் என்னென்ன விடயம் தொடர்பாக ஆராய வேண்டும். வெடிகுண்டு வெடித்த இடம், சென்ற வாகனத்தின் சிதறல்கள், வைத்தியரின் பகுப்பாய்வு அறிக்கை என்பவை எந்த அடிப்படையில் பேணவேண்டும் என்பது தொடர்பாக ஆராய்கின்றோம். எந்த அடிப்படையில் ஆராய வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்க இருக்கின்றோம் என்றார்.

### ஆண்களுக்கான தையல் பயிற்சி

(வடமராட்சி)

நெல்லியடி இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளை ஆண்க

# இராமர் ஆலயம் கட்டியே தீருவதென விஷ்வஹிந்து பரிஷத் உறுதி

[டில்லி]

அயோத்தியில் இன்று இராமர் ஆலயம் கட்டுவதை அயோத்தியில் நேற்றுக்கூடிய விஷ்வ ஹிந்து பரிஷத் அங்கீகரித்துள்ளது. இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று நண்பகல் பன்னிரெண்டேகால் மணிக்கு கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன. ஆனால் இந்தக் கட்டுமானப் பணி இந்திய உச்ச நீதிமன்றத்தின் கட்டளையை மீறும் செயலாகும். கட்டுமானப் பணிக்கு நீதிமன்றம் ஏலவே தடை விதித்திருக்கும் நிலையில், கட்டுமானப் பணியை ஆரம்பிப்பதன்மூலம் மத்திய அரசு எதிர் நடவடிக்கை எடுக்குமா என்பதுபற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை

அயோத்தியில் சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இந்து மதத் தொண்டர்கள் திரண்டுள்ளார்கள். தொண்டர்கள் கட்டுப்பாடற்று பாபர் மசூதிக்குச் சேதம் உண்டு பண்ணினால் இந்தியா முழுவதும் இந்து-முஸ்லிம் கலவரம் ஏற்படக்கூடும் என்று அஞ்சப் படுகின்றது.

இந்து-முஸ்லிம் கலவரம் நடந்தால், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாரதிய ஜனதாக் கட்சி தேசிய அரசைக் கைப்பற்றப் பார்க்கின்றது என தி.மு.க தலைவர் மு. கருணாநிதி கூறியிருக்கின்றார்.

### சீனி விநியோகம்

(வடமராட்சி)

புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சங்க கிளைகள் மூலமாக குடும்ப அட்டைக்கு கிலோ 27 ரூபா வீதம் இரண்டு கிலோ சீனி வழங்கப்பட்டுவருகிறது. [யோ]

### வீரச்சாவு

பாராதவிதமாக ஏற்பட்ட மோதலில் இரண்டுவிடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த லெப்டினன்ட் அழகுராசா / தீபன்ராஜ் (சந்தனம் செல்வம், கல்மடு புளியங்குளம்), வீரவேங்கை குமார் (சிவநாதன் விநாயகன், முள்ளிக்குளம், வவுனியா) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### ஐ. நா. ஸ்தாபன

இந்நாடுகளில்சில, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியை நாடியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தமிழில் தந்தி அனுப்ப 25 பேருடன் தொடர்பு

### அரச கருமமொழி ஆணையாளரின் அனுபவம்

(கொழும்பு)

இவர் தனது விருப்பத்தை

## இராணுவம் என்று கூறி தோட்டங்களில் கொள்ளை

(கொழும்பு)

தம்மை இராணுவத்தினர் என்றும், வீடுகளைச் சோதனையிடப்போவதாகவும் கூறி வருக்காப்பொல தோட்டப் பகுதிகளில் உள்ள தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது.

ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கோஷ்டிகள் இவ்வாறான கொள்ளைகளில் ஈடுபட்டு வருகிறது.


## மரண அறிவித்தல்கள்

### துரையப்பாச் செட்டியார் சீனிவாசகம்

(முன்னாள் அறங்காவலர் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில், ஆசிரியர், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி. நிர்வாகி, ஈழநாடு பத்திரிகை)

துரையப்பாச் செட்டியார் சீனிவாசகம் அவர்கள் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற கதிர்காமச் செட்டியார் துரையப்பாச் செட்டியார், காலஞ்சென்ற கிருஷ்ணம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கைலாயஞ் செட்டியார், சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தையல்முத்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தையல்அம்மையின் அன்புத் தம்பியும், காலஞ்சென்ற கதிர்காமச் செட்டியார் கிருஷ்ணபிள்ளை, கதிர்காமச் செட்டியார் சின்னத்தம்பிச்செட்டியார் ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற குப்புசாமிச் செட்டியார், காலஞ்சென்ற பழனிச்சாமி, முத்துக்குமாரசாமி, சின்னையா, காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற செல்லத்துரை, ராசநாதன் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சதாசிவம், பத்மாவதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக (06 - 12 - 92) ஞாயிற்றுக் கிழமை இன்றுகாலை 8 00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

134, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
[3754]

தகவல்:
சி. தையல்முத்து
(மனைவி)

## கந்தையா சின்னம்மா

மனையியல் ஆசிரியர்களை நியமிப்பதற்காக மனையியல் டிப்ளோமா பயிற்சி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களாகவும் 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்களாகவும் உள்ளவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இத்தகைமைகளைக் கொண் ... ஆம் திகதிக்கு முன்னர் ... ச் சேவைச் சபைக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அம்பாறை, திருக்கோணமலை, வவுனியா, பதுளை, மொனராகலை, அனுராதபுரம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களிலேயே தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## யாழ். மாவட்ட இறைச்சிக்கடை உரிமையாளர் சமாசம்

## முக்கிய அறிவித்தல்

இவ்வருட (1992) மார்கழி மாத இறுதிப் பொதுச் சபைக் கூட்டம் உபதலைவர் திரு க தங்கராசா தலைமையில் நாளை (7-12-92) திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு இல. 9. சின்னக்கடை வடக்கு வீதிக் காரியாலயத்தில் நடைபெற இருக்கிறது.

இக்கூட்டத்தில் பலதரப்பட்ட விடயங்கள் பேசப்பட இருப்பதால் சகல இறைச்சிக்கடை உரிமையாளர்களும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

க. சி. கிருஷ்ணன்
செயலாளர்
அற்புதராசா (பபி)
உபசெயலாளர்

(சி-5543)

# கண்ணீர் அஞ்சலி

39 ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்து ஆயிரக்கணக்கான மாணவருக்கு அறிவூட்டி வாழ வைத்த

பேராசான்
**து. சீனிவாசகம்**
அவர்களுக்கு எமது

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் நெஞ்சிருக்கும்வரை உங்கள் நினைவுமிருக்கும்

வைத்தீஸ்வராக் கல்லூரி,
அபிவிருத்திச் சபை.

யாழ்ப்பாணம்
06-12-92.

(3755)

வழங்கப்படும் என்று உத்தியோகபூர்வமாக எழுத்துமூலம் இவ்வைத்தியசாலைப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை இவ்வைத்திய சாலையின் தாதிகள் பயிற்சி நிலையத்தில் பயிற்சியை முடித்து வெளியேறிய சுமார் 15 தாதியர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின்கீழ் இயங்கும்மருத்துவமனைகளில் இதேகாலப் பகுதியில் கடமையாற்றியுள்ளனர் இவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆண்களுக்கான தையல் பயிற்சி

(வடமராட்சி)

நெல்லியடி இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளை ஆண்களுக்கான தையல் பயிற்சி வகுப்புக்கு இம் மாதம் 10 ஆம் திகதிவரை விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்கிறது. (யோ)

## புலமைப்பரிசில் 35 பேர் சித்தி

உடுவில் மகளிர் கல்லூரியில் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் 50 வீதம் ஆனோர் சித்தி அடைந்துள்ளனர். இங்கு 35 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். 190 புள்ளிகளை அன்ரோ றஜீவ் மைக்கல் பெற்றுள்ளார்

## மரப்பலகைக்கு பதில் கண்ணாடி இழைகள்

மரப் பலகைகளுக்குப் பதிலாக கண்ணாடி இழைகளைப் (பைபர் கிளாஸ்) பயன்படுத்த முடியும் என்று கூறப்படுகிறது. வீடுகளுக்கான கதவு, ஜன்னல், நிலைபோன்றவற்றிற்கு மரப் பலகைகளுக்குப் பதிலாக இந்தப் பைபர் கிளாஸ் பலகைகளை பயன்படுத்தலாம் என்றும், மரப் பலகைகளை விட பதினைந்து முதல் இருபது சதவிகிதம் செலவினங்கள் குறைக்கப்படுமென்றும் கூறப்படுகிறது.

நிதானமற்ற

மருந்து வகைகளையும் யானை விலைக்கு விற்பதாகக் கூறப்படுகிறது.

மேலும், சில பார்மஸிகள் வென்புலோன் என்ற தொற்றுக் கிருமி நீக்கப்பட்ட ஊசியை அதன் பாதுகாப்புப் பெட்டி உடைத்த நிலையிலும் விற்பனை செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இப்படியான ஊசிகள் மூலம் மருந்து ஏற்றுவதால் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் உண்டு என்று மருத்துவ வட்டாரங்கள் எச்சரிக்கின்றன.

சிகளை மேற்கொள்ளுகின்றோம்.

கமிஷன் என்னென்ன விடயம் தொடர்பாக ஆராய வேண்டும். வெடிகுண்டு வெடித்த இடம், சென்ற வாகனத்தின் சிதறல்கள், வைத்தியரின் பகுப்பாய்வு அறிக்கை என்பவை எந்த அடிப்படையில் பேணவேண்டும் என்பது தொடர்பாக ஆராய்கின்றோம். எந்த அடிப்படையில் ஆராய வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்க இருக்கின்றோம் என்றார்.

புளியங்குளம்), வீரவேங்கை குமார் (சிவநாதன் விநாயகன், முள்ளிக்குளம், வவுனியா) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

ஐ. நா. ஸ்தாபன

இந்நாடுகளில்சில, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியை நாடியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தமிழில் தந்தி அனுப்ப 25 பேருடன் தொடர்பு

### அரச கருமமொழி ஆணையாளரின் அனுபவம்

(கொழும்பு)

அரசகரும மொழிகள் ஆணைக்குழுத் தலைவர் தமிழ் மொழியில் தந்திச் செய்தி ஒன்றை அனுப்ப விரும்பினார்.

இவர் தனது விருப்பத்தை பூர்த்திசெய்வதற்கு கொழும்பு தபால் நிலையத்தில் சுமார் 25 பேருடன் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது. இவர் அரச கரும மொழிகளில் ஒன்றான தமிழில் தந்தி அனுப்புவதற்கு இவ்வளவு சிரமப்படவேண்டிய நிலையில் அரசகரும மொழி அமுலாக்கல் எந்த அளவு நடைமுறையில் உள்ளது என்பது தெரிய வருகின்றது.

க. பொ த.

தராதவர்களின் வெற்றிடங்களிற்கு புதிய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# பிரதிபொலிஸ்மா அதிபராக மூவருக்குப் பதவி உயர்வு

மூன்று சிரேஷ்ட பொலிஸ் சுப்பிரிண்டன்கள் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்திற்காக இவர்களின் பெயர்கள் சிபார்சுசெய்யப்பட்டுள்ளன

அன்டன் ஜெயநாதன் [பணிப்பாளர் நாயகம், போதைப் பொருள் தடுப்புப் பிரிவு], ஜயதிஸ்ஸ ஹேரத் [பொலிஸ் தலைமையகப் பணிப்பாளர்], வீரக்கொடி [பொலிஸ் தகவல் பரிவர்த்தனை நிலையம்] ஆகியோரே பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**05.12.92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6957

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-1462, 26-6062, 22-6666, 42-6119, 42-2800, 24-5964, 24-9489, 24-5127, 27-1072, 26,711, 27-7653

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-0248, 43-1019, 26-0673, 28-0364, 40-7207, 42-2397
26-9140, 41-4719, 28-1712, 24-6663, 24-5092, 27-0493
28-8054, 27-6692, 26-4450, 24-4992, 42-1325, 28-9249
26-0536, 28-1111, 40-4429, 26-5882, 40-4760, 42-0849

ணபிள்ளை, கதிர்காமச் செட்டியார் சின்னத்தம்பிச் செட்டியார் ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற குப்புசாமிச் செட்டியார், காலஞ்சென்ற பழனிச்சாமி, முத்துக்குமாரசாமி, சின்னையா, காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற செல்லத்துரை, ராசநாதன் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சதாசிவம், பத்மாவதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக (06 - 12 - 92) ஞாயிற்றுக்கிழமை இன்றுகாலை 8 00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

134, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
[3754]

தகவல்:
சி. தையல்முத்து
(மனைவி)

## கந்தையா சின்னம்மா

கொக்குவில், தாவடி தெற்கு "சரவணத்தோன்றல்" கந்தையா - சின்னம்மா காலமானார். இவர் காலஞ்சென்ற தபால், தந்தி உத்தியோகத்தர் கணபதிப்பிள்ளை - கந்தையாவின் அன்பு மனைவியும், தெய்வநாயகியின் அன்புத் தாயாரும், சட்டத்தரணியும், வைத்திய கலாநிதியுமான விவேகானந்தராசாவின் அன்பு மாமியும், சுந்தரவல்லி [வேம்படி மகளிர் கல்லூரி மாணவி], கார்த்திகேயன் [யாழ். இந்துக் கல்லூரி மாணவன்], ஆனந்தவல்லி [வேம்படி மகளிர் கல்லூரி மாணவி] ஆகியோரின் பேர்த்தியும். காலஞ்சென்ற நடராசா [ஐயா அப்பு], குமாரசாமியின் சகோதரியும், பவளம், கண்மணி, காலஞ்சென்ற மார்க்கண்டு, காலஞ்சென்ற விசாலாட்சி, சோதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 06-12-92 ஞாயிற்றுக்கிழமை இன்று அன்னாரது இல்லத்தில் பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று தாவடி மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தாவடி தெற்கு.
[3756]

தகவல்:
சி. விவேகானந்தராசா

## சபாபதி சிவகுரு

(இளைப்பாறிய ஆசிரியர் தே இ. கல்லூரி, சைவக்குருமணி) அவர்கள்

தோற்றம்:- 06 - 05 - 1911 மறைவு:- 05 - 12 - 1992

அல்வாய் தெற்கு பொன்மகள் வாசத்தைச் சேர்ந்த சபாபதி சிவகுரு அவர்கள் 05 . 12 . 1992 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்

இவர் காலஞ்சென்ற சின்னத்தங்கம் அவர்களின் அன்புக் கணவரும், சிவகுமாரி, சிவநாயகி, சிவமணி கணேசலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. மு செ. விவேகானந்தன், திருமதி ஜெயந்தி கணேசலிங்கம் ஆகியோரின் மாமனும், வி. செல்வரூபி, வி கலாரூபி, வி. கவிச்செல்வம், வி. கார்த்திகா, க. குருபரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 06-12-92 இன்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1 மணியளவில் பங்குவேம்படி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி சிவமணி விவேகானந்தன் [மகள்]
திரு. சிவகுரு கணேசலிங்கம் மகன்

[3757]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.